2022 மே 5] [திரு. தங்கம் தென்னரசு]

கிடைப்பதற்கும், வருவாய் இழப்பு ஏற்படாமல் இருப்பதற்கும், வேலைவாய்ப்பு குறையாமல் இருப்பதற்கும் அரசு, உரிய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். (குறுக்கீடு)

(இ) என்.எல்.சி. (NLC) நிறுவனத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் இழப்பீடு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி ஜெயராமன், நாம் நேரில் பேசிக்கொள்வோம், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், சொல்லுங்கள்.

***திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி, வணக்கம். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் 1956 ஆம் ஆண்டு முதல், இதுவரை சுரங்கம்–1, சுரங்கம்–1A, சுரங்கம்–2 ஆகியவற்றிற்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தியுள்ளது. சுரங்கம்–2–க்கு கையகப்படுத்தப்பட்ட நிலங்களே, இன்னும் 20 ஆண்டுகளுக்கு மேல் நிலக்கரி வெட்டி எடுப்பதற்குத் தேவையான அளவு இருக்கின்றபோது, சுரங்கம்–3 பணிகளுக்காக 26 கிராமங்களில், சுமார் 12,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் போவதாக அறிவித்திருப்பது, அப்பகுதி மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஏற்கெனவே NLC நிறுவனத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்கு, NLC நிறுவனம் கொடுத்த வாக்குறுதியின்படி, குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்பது இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. ஒரே பகுதியில் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு பல்வேறு நில மதிப்பீடுகள் வழங்கப்படுவது வேதனைக்குரிய விஷயமாக இருக்கின்றது. நாள் ஒன்றுக்கு NLC சுரங்கங்கள்மூலம் 72,000 கிலோ லிட்டர் தண்ணீர் பூமிக்கடியிலிருந்து உறிஞ்சி எடுத்து வெளியேற்றப்படுகிறது. இதனால் NLC சுரங்கத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் 10 அடியில் இருந்த நீர்மட்டம் தற்போது 1000 அடிக்குமேல் சென்றிருக்கிறது. Corporate Social Responsibility–CSR நிதி என்று அழைக்கப்படுகின்ற சமூகப் பாதுகாப்பு நிதியை இந்தியா முழுவதும் செலவிடுகிறார்கள். அது கடலூர் மாவட்டத்தின் பிரச்சினைக்காக குடிநீருக்கும், விவசாயிகளுக்கும், பொது முன்னேற்றத்திற்காகவும் செலவிடப்பட வேண்டும்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பணியமர்த்தப்பட்ட 300 பேர்களில் ஒருவர்கூட இந்தப் பகுதியில் உள்ளவர்கள் இல்லை, இதுதான் கேள்வி. இதை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குச் சொல்லுங்கள். அந்த அமைச்சர் மட்டும்தான் பதில் சொல்வார்கள்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *தற்போது நிர்வாகப் பணிகளுக்காக சுமார் 300 பேர்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பதாக அறிகிறோம். இதில், கடலூர் மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகத்திலிருந்து ஒருவர்கூட தேர்வு செய்யப்படவில்லை என்று தெரிகிறது. 1957 ஆம் ஆண்டிலிருந்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவாருங்கள்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *1957 ஆம் ஆண்டிலிருந்து குடியிருப்புப் பகுதியாக அறிவிக்கப்பட்ட மந்தாரக்குப்பம், திருவள்ளுவர் நகர், ஐ.டி. நகர் போன்ற பகுதிகளில் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் மனிதாபிமானமற்ற முறையில்* NLC *நிறுவனம் அந்த மக்களுக்கு வழங்கப்பட்ட மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்பைத் துண்டித்திருக்கிறது. மாண்புமிகு தமிழக தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், நான் சட்டமன்றத்தில் பேசியபோது, "இந்தப் பிரச்சினைகளையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று விவசாய பிரதிநிதிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசுச் செயலாளர் ஆகியோரைக் கொண்ட குழு அமைத்து விரைவில் தீர்வு காணப்படும்" என்று அறிவித்தார்கள். அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உங்கள் மாவட்டம்தானே. பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) அதான் சொல்லிவிட்டீர்களே, உட்காருங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் அமைந்திருக்கின்ற* NLC

2022 மே 5] [திரு. தி. வேல்முருகன்]

நிறுவனம் நிலத்தைக் கையகப்படுத்துகின்றபோது வீட்டிற்கு ஒருவருக்கு கண்டிப்பாக வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தோடு நிலத்தைக் கையகப்படுத்துகிறார்கள். 2017 ஆம் ஆண்டு மண்ணின் மைந்தர்கள், பூர்வீக குடிமக்கள், வீடு, நிலம் கொடுத்தவர்கள் வேலைக்கு வரக்கூடாது என்பதற்காகவே GATE *என்கிற நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்படுகிறது. தமிழர்கள் உள்ளே வராமல் இருக்க, அவர்களைத் தடுப்பதற்கான, அந்தத் தேர்வுக்குப் பெயரே* GATE. *அந்தத் தேர்வைக் கொண்டு வந்து இந்தியா முழுவதும் இருப்பவர்கள்* online*–ல் அதற்கு* apply *செய்து அதன்மூலம் அந்த வேலைவாய்ப்பு உரிமையை அவர்களுக்கு வழங்குகிறார்கள். ஆனால், நிலத்தைக் கையகப்படுத்தும்போது நமது வருவாய்த் துறை அதிகாரிகள்* Land acquisition*–க்கு பொறுப்பான* DRO–Land acquisition *வந்து நிலத்தைக் கையகப்படுத்துகிறார். ஆனால் வேலை கேட்கும்போது அவர் வரமாட்டேன் என்கிறார். தொழில் துறை இதில் தலையிட வேண்டும். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இதில் தலையிட வேண்டும். தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இதில் தலையிட வேண்டும். மந்தாரக்குப்பம் பகுதியில் முன்னறிவிப்பின்றி மின் இணைப்பினைத் துண்டித்திருக்கிறார்கள். மின் துறை ஊழியர்கள் அதற்குத் துணை போகிறார்கள். ஆகவே, மண்ணின் மைந்தர்களாகிய நாங்கள் வேலைவாய்ப்பினை இழந்து நிற்கிறோம். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை நான் வேண்டுவது, இரயில்வே துறையில் போராடி மாவட்ட பணி மூப்பு அடிப்படையில் பணி நியமனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி எங்களுக்குப் பெற்றுத்தந்தார்களோ, அதுபோல் இனி* NLC *நிர்வாகம் எந்தப் பணிக்கு ஆள் எடுத்தாலும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக வீடு, நிலம் கொடுத்த அந்த மண்ணின் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னுரிமை வழங்க வேண்டும். இல்லை என்று சொன்னால் ஒரு பிடி மண்ணைக்கூட அவர்கள் எடுப்பதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம், தமிழக அரசு ஒத்துழைப்பு தராது என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு முடிவை தமிழக அரசு எடுக்க வேண்டும் என்று தெரிவித்து அவையின் கவனத்தினை ஈர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில எடுப்பு மற்றும் அதனையொட்டி வேலை வழங்குவதில் அங்கே தொடர்ந்து பிரச்சினை இருந்துகொண்டேயிருக்கின்றது. அதில் தற்போதுகூட சமீபத்தில்* Graduate Aptitude Test in Engineering *(*GATE*) என்கிற அந்த தேர்வினை வைக்கும்போது அவர்கள் ஓர் அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், ஏற்கெனவே நடைமுறையிலுள்ள* GATE Exam*-ஐ நடத்தி, அதனுடைய* result*-ஐ வைத்து பணியாளர்கள் தேர்வினை நடத்துவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, தற்போது அறிவித்திருக்கின்ற* Graduate Aptitude Test in Engineering *(*GATE*) தேர்வினை இனிமேல் நடத்தி, அந்த அடிப்படையில்தான் நடத்த வேண்டுமே தவிர இதற்கு முன்பே நடத்தியதை வைத்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தேர்வுமூலம் எடுக்கப்பட்டதை இரத்து செய்துவிட்டு புதிதாக எடுக்க வேண்டும் என்று கேட்கிறீர்கள் அவ்வளவுதானே?*

திரு. சபா. இராசேந்திரன்: *இங்கு நடைபெறும் தேர்வுமூலம், முன்பெல்லாம் நடத்துகின்ற முறையில், இங்கே* College of Engineering, Guindy*-யோ அல்லது* Indian Institute of Technology, Chennai *மூலமோ ஒரு பொதுத் தேர்வினை நடத்தலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் தகவலுக்காக, விதி 55-ன்கீழ் அறிவிப்பு தந்தவர்களுக்குத்தான் பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கிறோம். (குறுக்கீடு) ஒரு வார்த்தையில் சொல்லி முடியுங்கள்.*

2022 மே 5]

முற்பகல் 11–40

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி NLC நிறுவனம் என்பது மத்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்டு நடத்தப்பட்டு வந்தாலும்கூட, 1956–லிருந்து இன்றுவரை நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை. அங்கிருந்து வெளியேற்றியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாகூட வழங்கவில்லை. இப்போதுதான் புதுகூரைப்பேட்டைக்கு பட்டா வழங்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது வரவேற்கக்கூடியது. ஆனால், இப்போது மீண்டும் நிலம் கையகப்படுத்தக்கூடிய நேரத்தில் மக்கள் ஒன்று திரண்டு போராட இருக்கின்ற காரணத்தினால், வேலைவாய்ப்பிற்கு உத்தரவாதம் அளிக்காமல், இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்காமல் நிலம் கையகப்படுத்தக்கூடாது; அரசு அனுமதிக்கக் கூடாது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன் அவர்கள், ஒரு வார்த்தை சொல்லுங்கள். நீங்கள் எழுதித் தர வேண்டும் அல்லது பேரவையில் என்னிடம் வந்து கேட்டிருக்க வேண்டும். இது நல்ல முன்னுதாரணம் இல்லை.

***திரு. R. ராதாகிருஷ்ணன்:** ஏற்கெனவே கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுத்திருந்தால் பேசுங்கள்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தையும், வீட்டையும் இழந்திருப்பவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். கண்டிப்பாக வீட்டிற்கு ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டும். நாங்கள் சென்ற வாரமே கவன ஈர்ப்பு கொடுத்திருந்தோம். இழப்பீட்டுத் தொகையையும் கூட்டித் தர வேண்டும்; நெய்வேலியில் நிலங்களை இழந்தவர்களுக்கு கல்வித் தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்பையும் கண்டிப்பாக தர வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளத்திலும், என் தொகுதியிலும் இதே நிலைதான். நிலத்தைக் கொடுத்துவிட்டோம். யாருக்கும் வேலை தருவது கிடையாது.

ஒன்றிய அரசு இதே நிலையில்தான் நீடித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்தான் இதில் தயவு காட்ட வேண்டும். இதேமாதிரி, Postal Department-க்கு ஆள் எடுத்தாலும் சரி, வெளிமாநிலத்தவர்கள்தான். Railway Department-க்கு ஆள் எடுத்தாலும் சரி, பொன்மலையில் எடுத்தீர்கள்; அதேபோல கோயம்புத்தூரில் எடுத்தீர்கள்; எல்லா இடங்களிலும் வெளிமாநிலத்தவர்கள்தான். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனி கவனம் செலுத்தி, நம்முடைய தமிழக மாணவர்கள், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க ஏற்பாடு செய்ய நல்ல பதிலாகச் சொல்லுங்கள். கூடங்குளத்தையும் சேர்த்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி நிலக்கரி நிறுவனம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கக்கூடிய ஒரு நிறுவனமாகும். அங்கே வேலைக்கு எடுக்கக்கூடிய பொறியாளர்கள், இதர உயர்நிலை அலுவலர்களை, பல்வேறு Recruitment Policy அடிப்படையில் அவர்கள் தேர்வு செய்கின்றார்கள். ஆனால், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு, குறிப்பாக, கடலூர் மாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்கு பணி வழங்கப்படவில்லை என்பது மிகுந்த வருத்தத்திற்குரியது. வேதனைக்குரிய ஒன்றாகும். இருந்தாலும், ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதுசம்பந்தமாக எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, பண்ருட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. தி. வேல்முருகன் அவர்கள், புவனகிரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்கள், நெய்வேலி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள், விருத்தாசலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. R. ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆகிய அத்தனைபேரும் நம்முடைய மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். நானும் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவன் என்பதை இந்த மன்றத்தில் நினைவுபடுத்த, பதிவு செய்ய விரும்புகின்றேன்.

ஆகவே, இந்த GATE exam சம்பந்தமாகவும், பண்ருட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நெய்வேலி தொகுதி

2022 மே 5] [திரு. சி.வி. கணேசன்]

சட்டமன்ற உறுப்பினர், ஏற்கெனவே நினைவுபடுத்தியதை, நினைவில் வைத்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திலிருந்து நெய்வேலி நிறுவனத்திற்கு கடிதம் எழுதி, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மேலும், நம்முடைய புவனகிரி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது என்னவாயிற்று என்று கேட்டார்கள். தற்போது சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, Secretary to Government, Labour Welfare and Skill Development Department, Additional Chief Secretary to Government, Industries Department மற்றும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் எடுத்துச்செல்ல இருக்கிறோம். சட்டமன்றம் முடிந்தவுடன் நம்முடைய மாவட்டத்திலிருக்கக்கூடிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அண்ணன் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் ஆகியோருடன் நானும் கலந்துகொண்டு, குறிப்பாக, NLC நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் CMD, Human Resources Department போன்றவர்களை சென்னைக்கு அழைத்து, இங்கே அந்தக் கூட்டத்தை நடத்தி, அதன் மூலமாக இதுபோன்று எதிர்வரும் காலங்களில் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களுக்கு, குறிப்பாக, கடலூர் மாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்கு, குறிப்பாக நிலம், வீடு ஆகியவற்றை இழந்து பல ஆண்டுக்காலமாகபோராடிக்கொண்டிருக்கின்றவர்களுக்கெல்லாம் உரிய நிவாரணம் வழங்குவதோடு மட்டுமல்லாமல், அந்த குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்க வேண்டுமென்பதை வலியுறுத்துவோம். இதுகுறித்து முழுமையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, அலட்சியம் காட்டாமல் அங்கே பாதிக்கப்பட்டிருக்கின்ற அத்தனை குடும்பங்களுக்கும் நிச்சயமாக அவர்களுடைய குடும்ப வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துகின்ற வகையில் இந்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் இந்த அவைக்கு தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.